Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 380 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி: எண் 4

மலர் 6 ... பகுதி மாசி 27 ஆம் நாள் ஷவ்வால் 24 (10 3 64) செவ்வாய்க்கிழமை இதழ் 29

யூனியன் பிளேஸிலுள்ள

# தொழிற் சங்கத்தில் குண்டு வெடித்தது!

## படுகாயங்களுடன் இரு சிறுவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

### காரியாலய கட்டிடத்தை பொலிஸார் காவல்புரிகின்றனர்

கொழும்பு, திங்கள்

**கொழும்பு யூனியன் பிளேசிலுள்ள இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் காரியாலயத்தில் இன்றுகாலை வெடிகுண்டொன்று வெடித்ததினால் இரு சிறுவர்கள் படுகாயமடைந்தனர். காரியாலயத்தின் கூரைமீதிருந்து வெடிக்காத மூன்று வெடிகுண்டுகளை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர். இ. தொ. சம்மேளன காரியாலயத்தின் கட்டிடத்தை பொலிஸார் காவல்புரிகின்றனர்.**

இன்று காலை இடம் பெற்ற இந்தச் சம்பவத்தினால் கொம்பனித்தெருவைச் சேர்ந்த 14 வயதுள்ள மொகமட் சித்தியும், 15 வயதுள்ள ரெச்ஸி சென்னும் படுகாயமடைந்தனர். சென்னின் ஒரு கையும் விரல்களும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. சித்தியின் சாலிலும் கையிலும் படுகாய மேற்பட்டுள்ளன. இரு சிறுவர்களும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து சென்ற கொம்பனித்தெரு பொலிஸார் யூனியன் காரியாலயத்தின் கூரைமீது இரண்டு குண்டுகளை கண்டு பிடித்தனர். பொலிஸாரின் அறிக்கைப்படி கூரை மீது மற்றுமிரு குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. சம்பந்தப்பட்ட இரு நிபுணர்கள் அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் வெடிக்காத மூன்று குண்டுகளை அப்புறப்படுத்தினர்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் இருமாதங்களுக்கு முன்னர் இரு கட்சிகளாகப் பிரிந்தது. "இலங்கை தொழிற் சங்க சம்மேளனம்" என்ற பெயருடைய கட்சியின் தலைவராக திரு. சண்முகதாசனும், மற்றைய கட்சிக்கு திரு. எம். ஜி. மெண்டிஸ் தலைவராகவும் இருக்கின்றனர்.

உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன் திரு எஸ். வாமதேவன் விசாரணைகளை நடத்தி வருகின்றார்.

## ஆஸ்பத்திரிகளில் மீண்டும் சகஜநிலை

### "டாக்டர்களைச் சந்திக்க தயாராகவிருக்கின்றேன்"

—சுகாதார மந்திரி

கொழும்பு, திங்கள்

**வேலைநிறுத்தம்செய்த சகல வைத்திய நிபுணர்களும், டாக்டர்களும் இன்று காலை மீண்டும் வேலைக்குத் திரும்பியதால் ஆஸ்பத்திரிகளில் மீண்டும் சகஜநிலை ஏற்பட்டது**

**யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடந்த பதினொரு தினங்களாக வேலைநிறுத்தம் செய்து வந்த டாக்டர்கள் நேற்று காலை வேலைக்குத் திரும்பினர். யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில 17 வைத்திய நிபுணர்கள் உட்பட 51 டாக்டர்கள் தங்கள் வழமையான வேலைகளில் ஈடுபட்டிருக்கக் காணப்பட்டனர்.**

வார்ட்டுகளில் வழமையான சந்தடி காணப்பட்டது. வெளி நோயாளர் பகுதியில் கடந்த வாரத்தில் காணப்பட்ட தொகையை விட கூடிய நோயாளர்கள் சிகிச்சைக்கு வந்திருந்தனர் வேலைநிறுத்தம் நடைபெறுவதற்கு முன்னர் திங்கட்கிழமைகளில் வரும் நோயாளர்களை விட நேற்றைய கூட்டம் குறைவானதே என ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்ய ஆரம்பித்த பின்னர் நகரின் தனிப்பட்ட சிகிச்சை நிலையங்களில் நோயாளர் தொகை அதிகமாகக் காணப்பட்டது. ஆனால் இன்றைய தினம் தனிப்பட்ட சிகிச்சை நிலையங்களில் வழக்கமான நோயாளர்களே காணப்பட்டனர்.

**காங்கேசன்துறையில்**

சென்ற வியாழக்கிழமை தொடக்கம் வேலைநிறுத்தம் செய்து வந்த காங்கேசன்துறை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த 4 டாக்டர்களும் நேற்று வேலைக்குத் திரும்பியுள்ளார்கள். (6-ம் பக்கம் பார்க்க)

பல்கலைக் கழகத்தில்

## 'வர்த்தகம், கணக்கியல்பாடங்களை தனித்தனியாக நடத்துக'

### உபவேந்தர்களுக்கு கடிதம்

நல்லூர், செவ்வாய்

பல்கலைக்கழகத்தில் வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடங்கள் தனித்தனியே நடத்த ஏற்பாடுகள் செய்யும்படி கோரி அகில இலங்கை வர்த்தக கலைமன்றம் வித்தியாலங்கார வித்தியோதய இலங்கைப்பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றல் குறிப்பிட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை க. பொ. த. உயர் வகுப்பிற்கு 1965-ம் ஆண்டிலிருந்து வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடங்கள் தனித்தனியாகச் சேர்க்கப்படவிருக்கின்றது. வித்தியோதய பல்கலைக்கழகத்தல் வர்த்தக உயர்தரவகுப்புகளும், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக பட்டதாரிகள் வகுப்புகளும் நடைபெற்றுவருகின்றன வர்த்தகக் கல்வி பயின்றவர்கள் மேற்படி வகுப்புகளிற் சேரும் சமயத்தில் சர்வகலாசாலைப் புகுமுகப் பரீட்சைக்கு புதிதாக பாடங்களை கற்கவேண்டியுள்ளது. இதன் காரணத்தால் வர்த்தக உயர்தரக் கல்வி பயில விரும்பும் மாணவர்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். எனவே இரு பாடங்களையும் தனித்தனியாக சேர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொருளாதாரம் அரசாங்கம் ஆகிய பாடங்களை ஒரே சமயத்தில் புகுமுகப்பரீட்சையில் எடுக்க அனுமதிக்க வேண்டும்.

இக் கடிதத்தின் பிரதிகள் கல்விமந்திரிக்கும் பல்கலைக்கழக வேந்தரான கவர்னர் ஜெனரலுக்கும், மூன்று பல்கலைக்கழக மேற்சபைகளுக்கும், பொருளாதார விரிவுரையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### இலங்கையிடம் சென்னை தோல்வி

கொழும்பு, திங்கள்

ஓவல் மைதானத்தில் இலங்கைக்கும் சென்னைக்குமிடையே 'கோபாலன்' கோப்பைக்காக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இலங்கை ஆறு விக்கட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது 'கோபாலன் கேடயத்தை' முன்பும் இலங்கையே கவீகரித்திருந்தது.

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய மகோற்சவம் 2-ம் திருவிழா - மாலை 6 மணி முதல் நடைபெறும். பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'புனிதவதியார்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்

## வடபகுதியில் முந்திரி சாகுபடித் திட்டம்

### அரசாங்கம் முயற்சி

நல்லூர், திங்கள்

இலங்கையிலுள்ள வரண்ட பிரதேசப் பகுதிகளில் முந்திரிச் செய்கையை ஏற்படுத்துவதற்கான திட்டமொன்றினை காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சு தயாரித்துள்ளது இத்திட்டத்திற்கமைய அரசாங்கம் முந்திரிச் செய்கைக்காக வரண்ட பகுதிக்காணிகளை மன்னாரில் சுவீகரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

சென்ற மாதம் 24-ந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் இதற்கான விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன காணியை அபிவிருத்திசெய்து முந்திரிச் செய்கையை ஆரம்பிக்கக்கூடிய தகுதி வாய்ந்த தனிநபர்கள், சங்கங்கள், கம்பெனிகள், கழகங்கள் போன்றவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் முந்திரிப் பயிர்ச் செய்கைக்கான நிலம் பெற விரும்புபவர்கள் இம்மாதம் 21-ந் திகதிக்கு முன்னர் மன்னார் அரசாங்க அதிபரிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முந்திரிச் செய்கைக்கு உகந்த நிலமெனக் காணப்பட்ட பகுதியில் இதற்கென 25,000 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. முந்திரிச் செய்கைக்காகக் காணி பெறுபவர்களுக்கு முதலில் அனுமதிப்பத்திர வகையில் அனுமதி வழங்கப்படுமெனவும் பின்னர் அபிவிருத்தியைப் பொறுத்து நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்படுமெனவும் அறியப்படுகிறது.

### ஒன்றரை லட்சம் கலன் பெட்ரோல் நாசம்!

சைகோன், மார்ச் 9

தென் வியட்நாமில் எண்ணை நிறுவனம் ஒன்றின்மீது கம்யூனிஷ்ட் வியட்கொங் குருப்புகள் குண்டுகளைப்போட்டதில் 1 லட்சத்து 55,000 கலன் பெட்ரோல் நாசமானது!

### மணிவாக்கு

மன ஆசையெனும் பெருஞ் சுழியிலிருந்து தப்ப இரு வழிகளுண்டு. நமக்குள்ளே இருக்கும் ஒளியின் வழி சென்று அலைதப்பி வாழ்ந்து ஆசை வலையில் படாமல் பாதுகாத்துக் கொள்வது. ஆபத்திலே ஒரு குழந்தை தன் பெற்றோர் கைக்குத் தாவுவது போல் ஆசை பிறந்ததும், உடன் கடவுளை நினைந்து அவரது பாதுகாப்புக்கு விரைவது இரண்டாம் வழி.

—பிராங்காய் பெனிலன்

ஈழநாடு
EELA NADU
EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு மாசி மீ 27 உ. (10-3-64)

## வடபகுதிக்கு நீர்வீழ்ச்சி மின்சார சக்தி

வட பகுதிக்கு நீர்வீழ்ச்சி மின்சார சக்தியை மாத்தளை வழியாகக் கொண்டுவரத் தாம் முயற்சி எடுத்துள்ளதாக கன்னகத்திலே நடந்த ஒரு கூட்டத்தில் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா அறிவித்தார். இது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும்.

தென்னிலங்கையுடன் ஒப்பிடுகையில், இப்பகுதியிலே மின்சார விநியோகம் எவ்வளவு பின் தங்கியுள்ளதென்பது தெரியவரும். இங்கு பல ஊர்களுக்கு மின்சார வசதியே இன்னும் ஏற்பட முடியவில்லை. யாழ்ப்பாணம் முதலிய இடங்களுக்கும் கூட மின்சாரம் அடிக்கடி தடைபட்டு விடுகின்றது. இதே சமயம் நாம் தென்னிலங்கை வாசிகளைவிட, மின்சாரத்துக்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் வடமாகாண அபிவிருத்திககான எந்தத் திட்டமும் நிறைவேறுவது குதிரைக் கொம்பென்று நிராசையான ஒரு நிலையில் வடமாகாண மக்கள் இருந்து வருகின்றார்கள். காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதாக வாக்குறுதி அளித்தும், வரவு செலவு திட்டத்திலே மான்யம் ஒதுக்கியும், இதுவரை ஒன்றும் செய்யப்படவில்லை. இந்நிலையில் அரசாங்க அதிபரின் இம் முயற்சிக்கு எவ்வளவு தடைகள் இருக்கக் கூடுமென்பதை சுலபமாக உணரலாம். என்றாலும் இங்குள்ள பார்லிமெண்ட் மெம்பர்களன்றி, அரசாங்க அதிபரே இதன் முக்கியத்தை உணர்ந்து, இம் முயற்சி எடுத்துள்ளதால், இதை அரசாங்கம் அலட்சியம் செய்ய முடியாது.

கல்லோயா, லக்ஸபான முதலிய நீர்வீழ்ச்சி மின்சார திட்டங்கள் வடமாகாணம் உள்ளிட்டு இலங்கை அனைத்துக்குமான தேசிய உடைமைகளாகும். அத்திட்டங்களுக்காக, பொது மக்களின் பணம் கோடிக் கணக்கில் செலவாகியுள்ளது. சில வெளி நாடுகளும் தாராளமாக உதவி செய்துள்ளன. ஆகவே, இத்திட்டங்களால் நன்மைபெற வடமாகாணத்துக்கும் உரிமை உண்டு.

கல்லோயாவிலிருந்து பதுளைக்கு மின்சார சக்தியைக் கொண்டு செல்வதற்கு கனடா அளித்த ஒரு கோடி 40 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. பல மலைகள் முதலியன கடந்து அச்சக்தி மிக சிரமத்துடன் அங்கு கொண்டு செல்லப்பட்டது. ஆனல் அதே சக்தியை மாத்தளை மூலமாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவதில் அவ்வளவு கஷ்டமில்லை. இங்கு மலை முதலிய தடைகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வட மாகாணத்துக்கு மலிவான நீர்வீழ்ச்சி மின்சாரசக்தி கிடைக்குமாயின், அரசாங்க அதிபர் கூறுவது போல், இங்கு பல பல கைத்தொழில்களை ஆரம்பிப்பதுடன், விவசாயத்தையும் விசேஷமாக அபிவிருத்தி செய்யலாம். தேசிய ஒற்றுமையைப் பற்றி வற்புறுத்தும் அரசாங்கம் இந்த நல்ல திட்ட விஷயமாக என்ன செய்யப் போகிறதென்பது முக்கிய கேள்வி. அதன் நல்லெண்ணத்தை நிரூபிக்கவும், தேசிய ஒற்றுமையை பலப் படுத்தவும் இது நல்லதோர் சந்தர்ப்பமாகும். இத்திட்டத்தை ஆரம்பிக்கும்படி அரசாங்க அதிபர் ஜெயவீரா வெற்றிகரமாகச் செய்வதாயின், அவரை வடமாகாணம் நன்றியுடன் போற்றும்.

---

### நல்லுறவு பலப்பட

"இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் நீண்டகாலமாக நல்லுறவும் ஒத்துழைப்பும் இருந்துவந்துள்ளது. இவ்விரு சாரினருக்குமுள்ள இந்த உறவை நீடிக்க, மல்வத்தை புதிய பௌத்த பீடாதிபதி எல்லா முயற்சியும் செய்வாரென்று நம்புகிறோம்" என்றிவ்வாறு மத்திய மாகாண சைவமகாசபைத் தலைவரான டாக்டர் வித்யானந்தன், புதிய பீடாதிபதி பதவி ஏற்ற வைபவத்தின்போது அவருக்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டிருக்கின்றார். மல்வத்தை புதிய பீடாதிபதி கல்வி அறிவும், பரந்த நோக்கும் உள்ளவரென்றும், பலராலும் பாராட்டப்படுகின்றார். நாட்டில் ஏற்படும் பல பல பிரச்னைகளையும் புத்தபெருமான் போதித்த கருணையின்படி தீர்க்க முற்படின், எல்லாப் பிரச்னைகளும் வெகு சுலபமாகத் தீரமுடியும். நாட்டில் அமைதி நிலவவும், மக்களிடையே நல்லுறவு பலப்படவும் செய்ய மல்வத்தை பீடாதிபதி போன்றவர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த எவ்வளவோ இடமுண்டு. அரசியல்வாதிகளைவிட, சமயத் தலைவர்களிடமே மக்களுக்கு அதிக மதிப்பும் பக்தியும் உண்டு. ஆகையால், மக்கள் ஒற்றுமையாக நல்வாழ்வு வாழ, சமயத் தலைவர்கள் ஒன்றுகூடி தக்க முயற்சி எடுக்கவேண்டியது அவர்களது மேலான பொறுப்பும் கடமையுமாகும். பல சமயத்தவரின் நன்மதிப்பையும் பெற்றுள்ள மல்வத்தை புதிய பீடாதிபதி இவ்வித தேசியபபணியை வெற்றிகரமாகச் செய்யமுடியுமென்றே நம்புகிறோம்.

## "சிங்களத்தை அமுல்செய்வதில் தீவிரவாதம் கூடாது"

கொழும்பு, திங்கள்

"சிங்களம் மட்டும்" உத்தியோக மொழிக் கொள்கையை அமுல் செய்வதில் வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் மேலதிகாரி தீவிரம் காட்டி வருவதாகக் கூறப்படுகிறது. எந்த ஒரு அறிக்கையுடனுமோ அல்லது கடிதத்துடனுமோ எந்த மொழி பெயர்ப்பும் இணைக்கப்படக் கூடாதெனவும் அவர் உத்தரவிட்டுள்ளாராம்.

ராகமை மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வரும் ஒரு நோயாளியின் டாக்டர், நோயாளிக்கு நோய் ஆரம்பித்தபோது எவ்விதம் இருந்ததென்பதை அறிவதற்காக நோயாளியின் ஆரம்பநிலை பற்றிய அறிக்கை அனுப்புமாறு வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தைக் கேட்டிருந்தார். ஆனல் அறிக்கை முழுவதும் சிங்களத்திலேயே வந்தது. டாக்டருக்கு இதை மொழிப்படுத்திக் கூறவும் எவரும் இருக்கவில்லை. எனவே ஆங்கில மொழிபெயர்ப்பு அனுபுமாறு ஸ்தாபனத்துக்கு எழுதியும் எதுவும் கிடைக்கவில்லை. நோயாளியின் சகோதரரான திரு. எம். எஸ். பெரேரா வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனக் கந்தோருக்கு நேரில் சென்று வினவிய போது ஸ்தாபனத்தின் டைரக்டர எல்லா வேலைகளையும் சிங்களத்தில் மட்டுமே செய்யச் சொல்லி உத்தரவிட்டுள்ளதாக உத்தியோகஸ்தர்கள் தெரிவித்தனராம.

நிதி மந்திரி கூறியது போல சிங்களத்தை உத்தியோக மொழியாக அமுல் செய்வதில் தீவிரவாதத்தன்மை இருக்கக் கூடாது என்பதை அரசாங்க ஊழியர்கள் மனதில் கொண்டு கடமையாற்ற வேண்டும் என்றும், ஒரு மந்திரியின் உறவினராக இருந்தால் அறிக்கை ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டிருக்கும் என்றும் திரு. பெரேரா புகார் தெரிவித்தார்.

## 2,600 ஆங்கில ஆசிரியர் நியமிக்கப் பட்டுள்ளனர்

கொழும்பு, திங்கள்

2,600 ஆங்கில ஆசிரியர்கள் பதவி காலியாக இருந்ததாகவும், 10,000 மாணவ ஆசிரியர்களை நியமித்ததுடன் அந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான பதவிகள் நிரப்பப்பட்டுள்ளதாகவும் கல்வி இலாகா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னர் செய்யப்பட்ட கணக்கெடுப்பொன்றின் போது 2,600 அரசாங்க பாடசாலைகளில் ஆங்கிலம் போதிக்க ஒரு ஆசிரியர்களுமே இருக்கவில்லை யென்றும் இப்பொழுது இந்த பாடசாலைகளுக்கு மாணவ ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டமையாலும் மத்திய மகாவித்தியாலயங்களில் இருந்த ஆங்கில உதவி ஆசிரியர்களும் இப்பாடசாலைகளுக்கு மாறமப்பட்டமையாலும் இப்பொழுது ஒவ்வொரு அரசினர் பாடசாலைகளிலும் ஆங்கிலம் போதிக்க ஆசிரியர்கள் இருப்பதாகவும் அதிகாரிகள் திருப்தி தெரிவித்தனர்.

கடந்த மூன்று வருடங்களிலும் சுமார் 600 பேர் ஆங்கில உதவியாசிரியர்களாக பயிற்றப்பட்டுள்ளதாகவும் சென்ற ஆண்டில் மட்டும் 150 ஆசிரியர்கள் ஆங்கிலப் பயிற்சி வகுப்பிலிருந்து வெளியேறினர்கள் எனவும் கல்வி இலாகா அதிகாரிகள் தெரிவித்தனர். மூன்ரும் வகுப்பிலிருந்து ஆங்கிலம் இரண்டாவது கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளதால் ஆங்கில ஆசிரியர்களுக்கான தேவை அதிகரித்திருந்ததாகவும் கல்விலாகா அதிகாரிகள் தெரிவித்தனர்.

## புங்குடுதீவு கிராமசபை நியமனங்கள் தாக்கல்

### மூவர் போட்டியின்றி தெரிவு

புங்குடுதீவு, திங்கள்

புங்குடுதீவு கிராம சபைக்கான அபேட்சா நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டசமயம் 5-ம், 9-ம், 11-ம் வட்டாரங்களுக்கு முறையே திரு கு. வி. தம்பித்துரை, திரு. சு நல்லதம்பி, திரு. சி. கார்த்திகேசு என்போர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர் மிகுதி 9 வட்டாரங்களுக்கும் 38 பேர் போட்டியிடுகின்றனர். தற்போதைய அங்கத்தவர்களில் ஏழுபேர் இம் முறை போட்டியிடவில்லை. போட்டி விபரம் வருமாறு:

1-ம் வட்டாரம்

ஆ. ச. இராஜேந்திரம் (தற்போதைய 2-ம் வட்டார அங்கத்தவர்), சி. கு. அம்பிகைபாகன் (தற்போதைய தலைவர்), ச. பரநிருபசிங்கம், க. நாகேசு, சின்னத்தம்பி, ந. கதிரேசு.

2-ம் வட்டாரம்

கா. ஆறுமுகம், சு. நாகேசு, மா. குமாரசுவாமி, செந்தில்நாதன்.

3-ம் வட்டாரம்

சு. கருணாகரன், க. குமாரசுவாமி, கந்தையா, பொன்னுத்துரை.

4-ம் வட்டாரம்

க. திருநாவுக்கரசு, பொ. கார்த்திகேசு, ப. சபாபதி, சின்னையா, ஏகாம்பரம், கதிரவேல்.

5-ம் வட்டாரம்

கு வி. தம்பித்துரை (போட்டியில்லை).

6-ம் வட்டாரம்

செ தர்மலிங்கம், தம்பிப்பிள்ளை.

7-ம் வட்டாரம்

ச. அம்பலவாணர், மயில்வாகனம் (தற்போதைய அங்கத்தவர்), மார்க்கண்டு, சிவசம்பு (தற்போதைய 8-ம் வட்டார அங்கத்தவர்), அருணாசலம்.

8-ம் வட்டாரம்

வி. இராசரத்தினம், வை. குணமாலை, பெ. நமசிவாயம்,

9-ம் வட்டாரம்

சு. நல்லதம்பி (போட்டியில்லை சமசமாஜி ஆதரவாளர்).

10-ம் வட்டாரம்

சு. நல்லதம்பி, இ. நாகலிங்கம், க. விசுவலிங்கம், க. நாகநாதர், கு. இலகுப்பிள்ளை, சி. சவிரிமுத்து.

11-ம் வட்டாரம்

கார்த்திகேசு (போட்டியில்லை).

12-ம் வட்டாரம்

ப. கதிரவேலு, (தற்போதைய 11-ம் வட்டார அங்கத்தவர்), தோ. அந்தோனிப்பிள்ளை.

---

### அம்பாள் ஆலய உற்சவம்

பருத்தித்துறை, திங்கள்

புலோலி தெற்கு சந்தாதோட்டம் முதலி அம்பாள் ஆலய 10-ம் உற்சவத்தன்று நான்கு நாடகங்கள் நடாத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மாணவர் மன்றத்தாரால் திருந்திய உள்ளம் என்னும் சமூக நாடகமும் பருத்தித்துறை சந்தாதோட்டம் தாகூர் கலா மன்றத்தாரால் "வா கோட்டடிக்கு" "இலட்சியப் பெண்" என்னும் சமூக நாடகங்களும் "அம்பிகாபதி" என்னும் காவிய நாடகமும் நடாத்தப் பட்டன.

## ஐயாறன் எழுதுவது

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலிலிருந்து இருலட்சுமிகள் சமேதமாக நேற்றுக் காலை மகாவிஷ்ணு புறப்பட்டு, திருக்கேதீச்சரம் செல்வதாயும் வழிநெடுக, பலரும் பூர்ண கும்பம் வைத்து வரவேற்பதுடன், உணவு முதலியன விநியோகிப்பதாகவும் ஓரன்பர் வந்து தெரிவித்தார்.

உணவு முதலியவற்றை இலவசமாக தெய்வத்தின் பெயரால், பலருக்கும் விநியோகம் செய்யும் பழைய பண்பு இக்காலத்திலும் மறையாமல் இருப்பது மிக விசேஷம். மேற்கத்திய நாடுகளிலும் சீனம் முதலிய நாடுகளிலும இவ்வித மேலான பண்பு இருப்பதாகத் தெரியவில்லை. பீரங்கியாலும், சட்டத்தாலும் செய்யமுடியாத சமூகசேவையை, தெய்வத்தின் பெயரால் சுலபமாகச் செய்யலாமென்பதற்கு இது அத்தாட்சி.

திருக்கேதீச்சரத்திலே மகாவிஷ்ணுமூர்த்தி இதுவரை இல்லாமலிருந்தது பெரிய குறையென்றும், காக்கும் கடவுளாகிய மகாவிஷ்ணு அங்கு கோவில் கொண்டதும், தமிழ் சமூகத்தின் பல கஷ்டங்களும் தீர வழிபிறக்குமென்றும் ஓரன்பர் நம்பிக்கை தெரிவிக்கின்ருர்.

* * *

நவாலியிலே ஓர் அன்பருக்குத் தாங்கமுடியாத பல்வலி வந்துவிட்டதாம். தெய்வத்திடம் மன்ருடி கண்ணீர் விட்டு பிரார்த்தித்ததன் பயனாக, பல்வலி ஆச்சரியமாக நின்றுவிட்டதாயும, மாதங்கள் பலவாகியும் பல்வலியின் அறிகுறி ஒன்றுமில்லையென்றும், நம்பினவர்களை இறைவன் கைவிடான் என்றும் நீண்ட கடிதம் எழுதியுள்ளார்.

அவருக்கு பல சகோதரிகளாம். அவர்களுக்கெல்லாம் பல்வியாதி வந்து, ஆஸ்பத்திரி சென்று பல்லைப் பிடுங்குவது வழக்கமாம். அவர்களை இந்த அன்பர் சேவி செய்து வந்தாராம். முடிவில் இவருக்கே பல்வலி வந்ததும் வெட்கம் வந்துவிட்டது. இளம் வயதில் பல்லைப் பிடுங்கிக்கொள்ளவும் மனமில்லை. துன்பங்களுக்கெல்லாம் "ராமநாமமே கைகண்ட மருந்து" என்று காந்தியடிகள் கூறியிருந்ததை நினைத்து, ராமர் படத்தின் முன்னின்று, கண்ணீர் மல்க, அந்த நாமத்தை பலமுறையும் உருகி உச்சரித்ததும், மூன்று மணிநேரம் கழித்து, பின்னர் படிப்படியாக குறைந்ததென்றும் எழுதுகின்ருர்.

இதைப்பற்றி ஓரன்பரிடம் கூறியபோது, பல்வலி அப்படித்தான் என்றும், மீண்டும் அது வந்துவிடலாமென்றும் சொன்னர். எனக்கும் முன்னர் இதேமாதிரி பல் வலித்தது. ஒரு பெரியவர் இந்துப்பை வறுத்து பொடி செய்து வெந்நீரில் கரைத்து பன்முறை சிவநாமத்துடன் சேர்த்து கொப்பளிக்கச் சொன்னர். பல வருடங்களாகியும் அவ்வலி திரும்பி வரவில்லை. இனி என்னமோ!

* * *

நல்லான்காண் நான்மறைகளாயினன்காண் நம்பன்காண் நணுகாதார் புரமூன் றெய்த, வில்லான்காண் விண்ணவர்க்கும் மேலானன்காண் மெல்லியலாள் பாகன் காண் வேத வேள்விச், சொல்லான்காண் சுடர்மூன்று மாயினன்காண் தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான் ஈய, வல்லான்காண் வானவர்கள் வணங்கியத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே.

—திருநாவுக்கரசர்.

# இந்திய ரேடியோவில் சிங்கள ஒலிபரப்பு

புதுடில்லி, மார்ச் 9

அகில இந்திய ரேடியோவின் தகவல் ஒலிபரப்புப் பகுதி சிங்களம், மலாய், தாய் ஆகிய மொழிகளில் ஒலிபரப்பு நடத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தகவல் ஒலிபரப்பின் பல்வேறு பகுதிகளும் சீனப்பிரசாரத்திற்கு எதிர்ப்பிரசாரம் நடத்துவதில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாயும் கூறப்பட்டது. உயர்சக்தியுள்ள பல சிற்றலை ஒலிபரப்பு நிலையங்கள் பலபகுதிகளில் நிறுவப்பட்டிருக்கின்றன.

தற்போது 29 இந்தியவெளிநாட்டு மொழிகளில் செய்திகள் ஒலிபரப்பப்பட்டுவருவதாயும் தினசரி 117 செய்திகள் ஒலிபரப்பாவதாயும் அறிவிக்கப்பட்டது.

தகவல் பகுதியின் திரைப் படப்பிரிவும் நெருக்கடி சம்பந்தமான படங்களைத் தயாரித்திருப்பதாயும் எல்லை அபாயம்பற்றி பொருட்காட்சிகள் நடத்தப்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

# மைசூர் மகாராஜா தமிழ்நாடு கவர்னராகிறார்

## தாணுப்பிள்ளைக்கு ஆந்திர கவர்னர் பதவி

புதுடில்லி, மார்ச் 9

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், மைசூர், பஞ்சாப ஆகிய ராஜ்யங்களுக்குப் புதிய கவர்னர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தற்போதைய கவர்னர் ஸ்ரீமேதிக்கு அடுத்து மகாராஜா ஸ்ரீ ஜயசாமராஜ உடையார்பகதூரை புதிய கவர்னராக ராஷ்டிரபதி நியமித்திருக்கிறார். இவர் தற்போது மைசூர் கவர்னராக இருக்கிறார்.

ஆந்திரப் பிரதேசக் கவர்னர் ஸ்ரீநாகேஷ் மைசூர் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பஞ்சாப் கவர்னரான ஸ்ரீபட்டம்தாணுப்பிள்ளை ஆந்திரப் பிரதேச கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முன்னாள் மத்திய மந்திரி திரு. ஹபீஸ்முகம்மது இப்ராஹிம் பஞ்சாப் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# "பாகிஸ்தானில் சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும்"

## அவாமிலீக் வற்புறுத்து

டாக்கா, மார்ச் 9

பாகிஸ்தானில் ஜனநாயக அரசியலமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் மக்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் கிழக்கு பாகிஸ்தான் அவாமிலீக் மீண்டும் வற்புறுத்தியிருக்கிறது. 2 நாள் நடைபெற்ற லீக்கின் கூட்டம் நேற்று முடிவடைந்தது. 900 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றினர்.

நேர்முகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் கிழக்கு-மேற்கு பாகிஸ்தான்களுக்கிடையே உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வு அகற்றப்பட வேண்டும் என்றும் டாக்காவை மத்திய அரசாங்கத் தலைநகராக்க வேண்டும் என்றும் அது நிறைவேற்றிய தீர்மானங்கள் கூறின.

அதேசமயம் நடைபெற்ற தேசிய ஜனநாயக முன்னணியும் சர்வஜன வாக்கெடுப்பை வற்புறுத்தியிருக்கிறது.

# வரி வசூல் ஊழியரை கடமையிலிருந்து தடுத்தாராம்

## வழக்கு ஒத்திவைப்பு

காங்கேசன்துறை, திங்கள்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இராஜசிங்கம் இராசரத்தினம் என்பவர் காங்கேசன்துறைப் பட்டினசபையின் வரிவசூல் உத்தியோகத்தர் திரு. இ. துரைராஜசிங்கம் என்பவரைத் தனது கடமையைச் செய்யவிடாது தடுத்தாரெனவும் அவரை அடித்ததோடு அவரது தோள்பட்டையிலிருந்த உத்தியோக முத்திரையையும் தொப்பியையும் பறித்து எறிந்தாரெனவும் காங்கேசன்துறைப் பொலிசார் அவருக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வரிவசூல் உத்தியோகத்தர் சாட்சியமளிக்கையில் குறித்த சம்பவம் நடந்த அன்று பட்டின சபைத் தலைவரின் கட்டளைப்படி எதிரியின் வீட்டிற்கு சென்று அவருடைய கதிரை சாமான்களை 1961 ஆண்டுக்கு வரிகொடுக்காத காரணத்தால் எடுக்க எத்தனித்தபோது அவர் தம்மை கடமை செய்யவிடாது தடுத்தாரெனவும் தெரிவித்தார்.

பட்டினசபை சேவகர் முருகேசு என்பவரும் சபைத்தலைவர் திரு. திடவீரசிங்கமும் சாட்சியமளித்தனர். நீதிபதி திரு. ஜி. எவ் எச். அத்தநாயக்கா வழக்கை இம்மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மு அரசரத்தினத்தின் அனுசரணையோடு திரு அ. குமரகுரு வழக்கை நடாத்தினர். திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் எதிரியின் சார்பில் ஆஜரானார்.

## யு. எஸ். விவசாயம் குருஷ்சேவ் பாராட்டு

மாஸ்கோ, மார்ச் 9

சோவியத் விவசாயிகள், தாங்கள் சிறந்ததென்று கருதும் பயிர்களை வளர்க்க அதிக சுதந்திரம் அளிக்கப்படவேண்டும் எனக் கருதுவதாக பிரதம மந்திரி திரு. குருஷ்சேவ் கூறினார்.

ஸ்டாலினின் கூட்டுறவு விவசாயக் கொள்கையைக் கண்டித்த அவர், சில அமெரிக்க விவசாய முறைகளைப் புகழ்ந்துரைத்தார்.

1953-ம் ஆண்டு ஸ்டாலின் இறந்தபின் அமெரிக்க விவசாய முறைகள் சிலவற்றை ரஷ்யத் தலைவர்கள் மேற்கொண்டனர் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவில் விஞ்ஞான ரீதியான விவசாயம் திறமையாக நடைபெறுகிறது என்றும் குருஷ்சேவ் கூறினார்.

## சைப்பிரஸில் சண்டை

நிக்கோஸியா, மார்ச் 9

சைப்பிரஸில் ஐந்து அல்லது ஆறு இடங்களில் கிரேக்க-துருக்கிய இனத்தவரிடையே கைகலப்புகள் மூண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இரு துருக்கிய கிராமங்களை கிரேக்கர்கள் சூழ்ந்துகொண்டு விட்டதாயும், ஒரு கிராமத்திற்குத் தீ வைக்கப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

பப்போஸ் பகுதியில் இரு சமூகத்தினரிடையே நிரந்தர யுத்தநிறுத்த ஏற்பாடு ஒன்று செய்துகொள்ளப்பட்டது. ஐ. நா. தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் கியானியின் தலைமையில் இந்த உடன்படிக்கை ஏற்பட்டது.

## ஸான்ஸிபார் நிலம் பூராவும் அரசாங்க சொத்து

ஸான்ஸிபார், மார்ச் 9

ஸான்ஸிபாரில் சகல நிலங்களையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருப்பதாயும், அரசாங்க அனுமதியின்றி புதிய சாகுபடி செய்யமுடியாதென்றும் அறிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமான சட்டம் விரைவில் கொண்டுவரப்படும் என ஜனாதிபதி கருமே அறிவித்தார்.

இதற்கிடையில் கிழக்காபிரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மந்திரி திரு. டங்கன் சாண்ட்ஸ் லண்டனுக்குத் திரும்புமுன் ஸான்ஸிபார் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். இந்தப்பேச்சுக்கள் உபயோகமாயிருந்ததாக அவர் கூறினார்.

## கம்போடிய நடுநிலைமை

நாம்பெங், மார்ச் 9

கம்போடியாவின் நடுநிலைமைக்கு உத்தரவாதமளிக்க நான்கு அரசுகள் மகாநாடு கூட வேண்டுமென்ற தமது யோசனைக்கு அமெரிக்கா, தென்வியட்னாம், தாய்லாந்து ஆகிய நாடுகள் அநேகமாக இணக்கம் தெரிவித்திருக்கிறதென இளவரசர் நரோடம்சிகோனக் கூறினார்.

## நைஜீரிய நிருபர்கள்

புதுடில்லி, மார்ச் 9

8 பேரடங்கிய நைஜீரிய பத்திரிகை நிருபர்கள் தூதுகோஷ்டி ஒன்று, 14 நாள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு இந்தியா வந்திருக்கிறது.

## மலேஸிய பிரச்னை

கோலாலம்பூர், மார்ச் 9

மலேஸிய பிரச்னையை ஐ. நா.வுக்கு எடுத்துச்செல்லுவது குறித்து இன்று நடைபெறவிருக்கும் மலேஸிய மந்திரிசபை தீர்மானிக்கும் என பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினார்.

## "ஆங்கிலம் சாஸ்வதமல்ல" — சக்ளா

சென்னை, மார்ச் 9

ஆங்கிலம் சாஸ்வதமாய் இருக்கமுடியாது என்றும், அதே சமயம் ஹிந்தி கட்டாயமாகப் புகுத்தப்படக்கூடாது என்றும் மத்திய கல்வி மந்திரி திரு. எம். ஸி. சக்ளா கூறினார். பல்கலைக்கழக உபவேந்தர்களை அவர் சந்தித்துப் பேசினார்.

## சைகோனில் மக்னமாரா

சைகோன், மார்ச் 9

அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா தென்வியட்னாம் தலைநகரில் பிரதமர் ஜெனரல் கானுடன் 3 மணி நேரம் சம்பாஷணை நடத்தினார். கம்போடியா, லாவோஸ், வடவியட்னாம் ஆகிய பிரச்னைகள் பற்றி விவாதம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# வருங்கால டெலிவிஷன்கள்

ஸ்டட்கார்ட் (டாட்) மார்ச் 9

டெலிவிஷன் மிகப் பிரபலமாவதற்குக் காரணம் அது காட்டப்படும் "நிப்கோ திரை"தான். இதை போமரேனியாவைச் சேர்ந்த பொறியியல் நிபுணர் பால் நிப்கோ 1884-ல் கண்டுபிடித்தார். பெர்லினில் ஒலிம்பிக் விளையாட்டுகள் 1936-ல் நடைபெற்றபோது பெர்லினுக்கும் லீப்ஸிக்கிற்குமிடையே காட்டப்பட்ட டெலிவிஷன் காட்சிகளையும் அவர் கண்டார். இந்த முறையைக் கண்டுபிடித்த இவர் இரண்டாவது உலக யுத்தத்தின்போது இது வெற்றிபெற்றதைக் காண உயிருடன் இல்லை. 1940-ல் அவர் காலமானார். ஆனால் இன்று மேற்கு ஜெர்மனியில் ஒன்பது டெலிவிஷன் நிலையங்கள் 825 லட்சம் செட்டுகளில் டெலிவிஷன் காட்சிகளைக் காட்டிவருகின்றன.

டெலிவிஷன் வளர்ச்சி மிகவும் துரிதமாக நடைபெற்றுவருகிறது. "பாக்கெட்" அளவு டெலிவிஷன் செட், சுவற்றில் மாட்டக்கூடிய ஒளி பொருந்திய திரைகள், ஒரே செட்டைக்கொண்டு ஒரு வீட்டில் பல இடங்களில் டெலிவிஷன் காட்சியைக் காட்டுவது, மூன்று 'டைமன்ஷன்' (பரிமாண) வர்ண டெலிவிஷன், டேப் ரிக்கார்டரில் பதிவு செய்வது போல டெலிவிஷன் காட்சிகளையும் பதிவு செய்து வேண்டும்போது திரும்பப் பார்த்துக்கொள்வது இவை யாவும் அடுத்த 25 வருடங்களில் சாத்தியமாகும் என்றே எதிர்பார்க்கலாம்.

சிறிது, இன்னும் சிறிது, மிக மிகச் சிறிது ஆகியவையே எதிர்காலத்தின் லட்சியமாக இருக்கும். ஒரு பவுண்ட் எடைக்கும் குறைவான டெலிவிஷன் காமிரா உருவாக்கப்படும்.

ஒரு ஜொக்கி, தான் குதிரை மீது சவாரி செய்யும்போது இந்த காமிராவை தன்னுடன் எடுத்துச் செல்வதன் மூலம் குதிரைமீது சவாரி செய்யும்போது காட்சிகள் எப்படித் தோன்றும் என்பதை டெலிவிஷன் திரையில் எல்லோருமே கண்டுகளிக்கலாம். நகரத்திற்கும் நகரத்திற்கும், நாட்டிற்கும் நாட்டிற்குமிடையே டெலிவிஷன் காட்டுவது நாளடைவில் 'லாஸர்' கிரணங்கள் மூலம் சர்வசாதாரணமாகச் சாத்தியமாகிவிடும்.

## கென்னடியை நோக்கி 4 குண்டுகள் சுடப்பட்டன?

டல்லாஸ், மார்ச் 9

"காலம் சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடியை நோக்கி 4 சன்னங்கள் சுடப்பட்ட சமயத்தில் சம்பவத்தைப் பார்த்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜேம்ஸ்வாரல் என்ற இளைஞர் இது சம்பந்தமாக பத்திரிகை ஒன்றுக்கு தகவல் தெரிவிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

'கென்னடியை நோக்கி குண்டுகள் பாய்ந்த கட்டடத்தின் கீழுள்ள நடைபாதையில் நான் நின்று கொண்டிருந்தேன், சன்னங்கள் வெளிவந்ததாகக் கூறப்படும் 6-வது மாடிக் கட்டடத்திலுள்ள யன்னலுக்கு சரி நேராக நான் நின்று கொண்டிருந்தேன். சுடப்பட்ட சப்தம் கேட்டதும் நான் உடனே சன்னம் பாய்ந்த இடத்தை நோக்கியபோது அது ஜனாதிபதி கென்னடியின் தலையின் பின்பக்கத்தில் தாக்கியதை அவதானித்தேன்.

சம்பவத்தை நேரில் பார்வையிட்டதாகக் கூறப்படும் மற்றவர்களின் சாட்சியங்களைக் கொண்டு மூன்று சன்னங்களே சுடப்பட்டன என பொலிசார் நிரூபித்திருந்தனர். ஜனாதிபதி கென்னடி சென்ற வருடம் நவம்பர் மாதம் 22-ம் திகதி சுட்டுக்கொலைசெய்யப்பட்டது. சம்பந்தமாக தொடர்ந்து புலன்விசாரணை நடைபெற்றுவருகிறது.

## காஷ்மீர் பிரதமர்

ஸ்ரீநகர், மார்ச் 9

காஷ்மீர் மக்கள் தங்கள் இஷ்டப்படி இந்தியாவுடன் இணைந்திருக்கிறார்கள் என்றும், இந்த இணைப்பை மாற்ற அண்டைநாடும் அதன் நேசநாடும் செய்யும் முயற்சி பலிக்காது என்றும் பிரதம மந்திரி குலாம் முகம்மதுசாதிக் கூறினார்.

# பாரதப் பிரஜைகள் புகுந்தனராம்

## அஸ்ஸாம் ஆட்சேபம்

ஷில்லாங், மார்ச் 9

பாரதப் பிரஜைகள் பாகிஸ்தானுக்குள் புகுந்து அங்குள்ள ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோரின் வீடுகளுக்குத் தீ வைத்தார்கள் என்றும், இந்தியாவுக்கு அவர்களை வரச் செய்வதற்காகவே இவ்வித பலாத்காரச் செயல்களை அவர்கள் புரிந்ததாயும் கிழக்கு பாகிஸ்தான் கூறியிருப்பது அப்பட்டமான பொய் என அஸ்ஸாம் அரசாங்கம் ஆட்சேபித்திருக்கிறது.

இவ்விதப் பிரசாரத்தின் மூலம் உலகை ஏமாற்ற முடியாது என கிழக்கு பாகிஸ்தானை எச்சரித்திருக்கிறது.

## கைகலப்பில் நால்வர் பலி

பம்பாய், மார்ச் 9

பம்பாயின் சுற்றுப்புறக் கிராமம் ஒன்றில் தகராறு காரணமாக ஏற்பட்ட ஒரு கைகலப்பில் 4 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 73 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## ரயில் விபத்தில் 7 பேர் பலி

கல்கத்தா, மார்ச் 9

நேற்றிரவு கல்கத்தாவுக்கருகே போத்பூரில் சென்னை-ஹௌரா எக்ஸ்பிரஸ் விபத்திற்குள்ளாகியதால் 7 பேர் கொல்லப்பட்டனர். 35 பேர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்கள் நால்வர் ரயில்வே ஊழியர். 2 பெண்களும், 2 குழந்தைகளும் உட்பட 26 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் நடந்த இடத்திற்கு தென்கிழக்கு ரயில்வே உயர் அதிகாரி விஜயம் செய்திருக்கிறார்.

## புதிய அதிபருக்கு பாராட்டு

கச்சாய், திங்கள்

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் அதிபராக நியமனம் செய்யப்பட்ட திரு. ஜே. வீ. தம்பிநாயகத்துக்கு மேற்படி கல்லூரி ஆசிரியர் சங்கம் மகத்தான வரவேற்பொன்றை அளித்தது. சங்கத்தலைவர் திரு. எம். கார்த்திகேசு தமது தலைமையுரையில், தான் அதிபருடன் ஒருமித்து கடமையாற்றிய காலத்தில் அவரிடம் காணப்பட்ட சீரியகுணங்களையும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ பாகுபாடின்றி மாணவரைத் தத்தம் சமய முறையில் வாழக்கூடிய வகைசெய்யும் ஒருவரையும் அதிபராக நாம் பெற்றது நமது பாக்கியமே என்றார். மாணவி செல்வி கிருபை கந்தையா திருவாளர்கள் சி. வ. வைத்தியலிங்கம், வி. என். ஐயாத்துரை ஆகியோரும் அதிபரின் ஆற்றலையும், அன்பையும், ஒத்துழைப்பையும் பெரிதும் வியந்துபேசினர்.

ஈற்றில் அதிபர் ஆசிரியர் குழாமுக்கு நமது அன்பையும் வணக்கத்தையும் தெரிவித்து கல்லூரி அப்பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக திகழ ஒன்றுபட்டுழைக்கக் கூடிய தமது பழைய மாணவ ஆசிரியர் மத்தியிலும் ஆசிரிய நண்பர்கள் மத்தியிலும் மகிழ்வுடனும் பெருமையுடனும் ஊழியம் செய்யக் கிடைத்த வாய்ப்பை நாம் மன மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதாகவும் கூறினார்.



# மாணவர் மலர்



## விசித்திர மனிதன்!

மகான்

நல்ல வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்த அந்த அலங்காரப் பொருளைக் கையிலெடுத்துக்கொண்டு... "ஏது அருமையாக இருக்கிறதே... இதை எங்கு வாங்கினீர்கள்...?" என்று கேட்டார் ஷகான். "இது பெறுமதியுள்ள பொருள் சார். சிங்கப்பூரில் நூற்றைம்பது ரூபாய்க்கு வாங்கினேன்..." என்றார் அருளப்பன். அறையையும், அறைக்குள்ளிருந்த பல விநோதக் காட்சிப்பொருள்களையும் பார்வையிட்டுக்கொண்டு முன் ஹோலுக்குள் வந்தமர்ந்தார் துப்பறிவாளர் ஷகான். அவருக்கருகில் அருளப்பனும் இருந்தார்.

பால் கோப்பியை அருந்திக்கொண்டே பேச்சுகளை மீண்டும் ஆரம்பித்தார் ஷகான். "மிஸ்டர் அருளப்பன் சங்கரலிங்கம்பிள்ளையின் கொலை பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள். யார்மீதும் உங்களுக்குச் சந்தேகமிருக்கின்றதா...?" என்று கேட்டார் ஷகான்.

"இல்லை சார். டாக்டர்களின் அறிக்கையைக் கவனிக்கும்பொழுதுதான்... சங்கரலிங்கம்பிள்ளை அவர்களுக்கு விரோதிகளும் இருந்திருக்கிறார்களென்பது தெரியவருகிறது. என்னுடன் பழகிய காலத்தில் அவருக்கு யாருமே விரோதிகளாக இருந்திருக்கமாட்டார்கள் சார். ஆனால் சங்கரலிங்கம்பிள்ளை கொலைசெய்யப்பட்டிருக்கிறாரென்று டாக்டர்கள் தெரிவித்ததிலிருந்து எனக்குப் பல சந்தேகங்கள் கிளம்பியிருக்கின்றன ஸார். அதைத் தெளிவுபடுத்த, நாம் சங்கரலிங்கம்பிள்ளை அவர்களின் வழக்கறிஞரைச் சந்திப்பது நல்லதாகத் தோன்றுகிறது சார். உங்களின் யோசனை எப்படி...?" என்றார் அருளப்பன்.

"அந்த வழக்கறிஞரை நான் ஏற்கெனவே சந்தித்துவிட்டேன்" என்று ஷகான் சொன்னபொழுது அருளப்பனின் முகம் ஆச்சரியத்தில் மூழ்கியது. "சங்கரலிங்கம்பிள்ளையின் மகன் ராஜனின் குணம் எப்படி? அவரை உங்களுக்கு முன்னதாகவே தெரியுமா?" என்றுஒரு அணுகுண்டைத் தூக்கிப்போட்டார் ஷகான்.

"நானும் அதைத்தான் சொல்ல நினைத்திருந்தேன். ராஜனை எனக்கு அதிகநாளாகத் தெரியாதபோதிலும் சிறிதுகால பழக்கத்துக்குள்ளாகவே ராஜனின் சில போக்குகளை நான் புரிந்துகொண்டுவிட்டேன் சார். அவர்கள் லசெலவாளி. ஆனால் ராஜன் எவ்வளவைச் செலவழித்தாலும் சங்கரலிங்கம்பிள்ளைக்கு ராஜன்மீது நல்ல பற்றிருந்தது. சில மாதங்களுக்கு முன்னர் ராஜனின் காரொன்று விபத்தில் சிக்கிச் சுக்குநூறானதாம். ஆனால் அதற்குச் சங்கரலிங்கம்பிள்ளை ஒருவிதத்திலும் குறைசொல்லவில்லை. அதற்குப் பதிலாக ஓரிரு வாரத்துக்குள்ளாகவே புதிய காரொன்றை வாங்கிக்கொடுத்துவிட்டார். பாருங்கள் ஒரு தந்தையின் பெருந்தன்மையை...!" என்று கூறி முடித்தார் அருளப்பன்.

"அப்படியென்றால் வளர்ப்பு மகன் சோமனைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்......?" என்று துப்பறிவாளர் ஷகான்.

"சோமனைப்பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. அதற்கு முக்கிய காரணம், சோமனைப்பற்றி சங்கரலிங்கம்பிள்ளை அவர்கள் அடிக்கடி எதுவும் சொல்வதில்லை. சோமன்மீது முன்பிருந்த பாசம்கூட அவரிடம் இல்லாமல் போய்விட்டது" என்றார் அருளப்பன்.

"சோமன்மீது பாசமில்லை என்பதை நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்" என்று ஷகான் கேட்டபொழுது; அருளப்பன், தாம் கடந்த வருடம் சிங்கப்பூர் சென்றிருந்த சமயத்தில் இவற்றை நேரில் கண்டதாகவும் இதன் அடிப்படைக் காரணம் பணமாகவிருக்கலாமென்றும் கூறினர்.

"ஓ... அப்படியா...? அப்படியென்றால் சோமனின்மீது உங்களுக்கு சந்தேகமா...?" என்று ஷகான் கூறி முடிப்பதற்குள் அருளப்பன் குறுக்கிட்டு "......நல்ல வார்த்தை சொன்னீர்கள் ஸார். பாவம். அந்தப் பொடியன்மீது சந்தேகப்படக் காரணமே இல்லை ஸார்......" என்றார்.

அச்சமயத்தில் எதைப்பற்றியோ யோசனை செய்த ஷகான், அங்கு மேசைமீதிருந்த சிகரெட் பாக்கெட்மீது பார்வையைச் செலுத்தினர். அந்த சிகரெட் பாக்கெட் இலங்கையில் தயாரிக்கப்படாதது. இலங்கையிலும் கிடைக்காதது. சிகரெட் பாக்கெட்டைத் திறந்து ஒரு சிகரெட்டைக் கையிலெடுத்தார் ஷகான்.

தீப்பெட்டி வேண்டுமா என்று அருளப்பன் கேட்டதற்கு, "வேண்டாம் எந்தநேரமும் நான் சிகரெட் புகைப்பதில்லை; பின்னர் புகைத்துக்கொள்கின்றேன்" என்றார் ஷகான்.

சிறிது நேரத்தின் பின்னர் "நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" என்று கேட்டார் அருளப்பன். "நினைப்பதற்கு என்ன இருக்கிறது, இந்தக் கொலையில் பல சிக்கல்கள் மாட்டிக் கிடக்கின்றன. உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிப்பது இலேசான காரியமா. என்ன...... இருந்தபோதிலும் உங்களுக்கு அளித்த வாக்கை நான் காப்பாற்றத் தவறமாட்டேன்" என்றார் ஷகான்.

(தொடரும்)

## மூளைக்கு வேலை

சென்ற வாரம் நான் சிறிது இலேசான கேள்வியைக் கேட்டுவிட்டேன் என்பதை உங்களிடமிருந்து எனக்குக் கிடைத்த தபாலட்டைகள் நிரூபித்துவிட்டன. "மூளைக்கு வேலை" பகுதியில் பங்குபற்றுவோர் தொகை வாராவாரம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இது...... "மாணவர் மலரில்" உங்களுக்கிருக்கும் அபிமானத்தை தெளிவாகக் காட்டுகிறது.

தபாலட்டைகளில் விடைகளை எழுதும் பலர், தங்களின் பெயர் விலாசத்தைத் தெளிவாக எழுதாததினால் அவற்றை வாசித்தறிந்து கொள்வது புரியாத புதிராகவிருக்கிறது. தபாலட்டைகளிலும், கடிதங்களிலும் விடைகளை எழுதும்பொழுது உங்களின் பெயர் விலாசத்தையும் தெளிவாக எழுதுங்கள். தெளிவான முறையில் பெயர், விலாசம் எழுதப்படாததால் சரியான விடையெழுதிய பலரின் பெயர்கள் இம்முறை வெளியாகவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். சிலர் பெயர் எழுதுகிறார்கள். ஆனால் விலாசம் இல்லை. பெயரும் விலாசமுமில்லாத விடைகள் கண்டிப்பாக இனிமேல் கவனிக்கப்படமாட்டா.

ஆமா... சென்றவாரம் விடையென்ன...? கௌசிக்கு நாதன் மாமா சொன்ன இரகசியம் என்ன......?

"நான் பிறந்தது ஒரு லீப் வருடத்தில். அதாவது பெப்ரவரி மாதம் 29-ம் திகதி. அதுதான் நான்கு வருடங்களுக்கொருமுறை பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றேன்......" என்றார் நாதன் மாமா. இந்த ரகசியம் உங்களில் பலருக்கும் தெரிந்துவிட்டது!

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த பிரின்ஸ் சந்திரகுமார் பெஞ்சமின், என். பி. ராகவன், இ. சித்தாத்தன், மகேந்திரன், சாந்திகுமார், பி. மோகனதாஸ், டி. ஜே. ஹென்ஸ்மன், டி. சூரியகுமாரன் ஆகியோர் சரியான விடை அனுப்பியிருக்கின்றார்கள். இவர்களைத் தவிர லிங்கா கௌரி அரியநாயகம், கத்லீன், நா. சிவபாலமூர்த்தி, யாழ்ப்பாணம்; ஆ இந்திராணி சொர்ணகாந்தி, பருத்தித்துறை; ந. ஜெயதேவி, இராமநாதபுரம் வடக்கு; க. சிவலிங்கம், திருநெல்வேலி வடக்கு; த. சந்திரமோகன், நல்லூர்; வை. சச்சிதானந்தசர்மா, காரைநகர்; செல்வரதி சிவஞானம், மானிப்பாய்; எம். அமிர்தி, தெல்லிப்பழை; ச. பிரான்சிஸ்கா, கொக்குவில்; மு. இந்திராணி, கொக்குவில்; எஸ். ஜே முத்தையா, யாழ்ப்பாணம்; ஸ்கந்தபாலன் இராசதுரை, யாழ்ப்பாணம்; சி. கனகநாயகம், கந்தரோடை; ஹரநாத், சுண்டிக்குளி; இ தினகரன், கோண்டாவில் வடக்கு; க. சிங்கநாயகம், மாமுனை; முள்ளிபவளை; த. செல்வானந்தா சா, இணுவில்; சபா. புஷ்பநாதன், சுன்னாகம்; க. புஷ்பராணி, சாவகச்சேரி; சி. ரவீந்திரசர்மா, பூநகரி; சநசா, காரைநகர்; தேவயாணி பாலசுப்பிரமணியம், திருநெல்வேலி வடக்கு; ஆ இராணி பவளகாந்தி, பருத்தித்துறை; அ. கனகசூரியர், வடமேற்கு; ம. மகாயுத்தமன், உரும்பராய்; ம. சரோஜினி, காரைநகர்; கே. சுகுமாரன், சுண்டிக்குளி; எஸ் பரந்தாமன், உரும்பராய்; கந்தையா நீலகண்டன், கரணவாய் தெற்கு; ஆ. சரோஜினி, காரைநகர் இந்துக்கல்லூரி; மா. வரதுகராணி, சாவகச்சேரி ஆகியோரும் சரியான விடையெழுதியிருக்கின்றார்கள். உங்களனைவருக்கும் எனது பாராட்டுதல்கள்!

### கேள்வி மண்டலம்

இவ்வாரம் ஒரு சரித்திர சம்பந்தமான கேள்வி. ஒரு நாட்டில் கடந்த சில காலத்துக்குள் பல மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. அந்த நாட்டு அதிபரின் பெயரை அறியாதவர்கள் வெகு சிலர்தான் உளர். சில வாரங்களுக்கு முன்னர் அந்தநாட்டில் புதியதொரு மாற்றத்தைக் கூட சட்ட ரீதியாய்க் கொணர்ந்துவிட்டார். கேள்வி என்ன தெரியுமா? அந்த நாட்டின் தலைநகரத்தின் பெயர் என்ன?

ஒரு குறிப்பு அந்த நாட்டில் இப்பொழுது சட்டபூர்வமான எதிர்க்கட்சிகள் எதுவும் இல்லை. என்ன புரிகிறதா.........? விடை தெரிகிறதா.........? உங்களின் விடையை தபாலட்டையில் எதிர்வரும் சனிக்கிழமைக்குப் பிந்தாமல் மாணவர் மலர் 'ஈழநாடு' த. பெ. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். மீண்டும் அடுத்த வாரம் சந்திப்போம்.

—சாந்தா

## வள்ளுவர்

வாழ்வுக்கு வழி காட்டும் நற்பழக்கங்களுக்கு தூபமிடும், கெட்ட பழக்கங்களை அழிக்க தூண்டும் தெய்வ நெறியான திருக்குறளை இயற்றியவர்தான் திருவள்ளுவர். இவர் இயற்றியுள்ள ஒவ்வொரு பாடல்களும் ஒவ்வொரு வழியை நமக்குப் போதிக்கின்றன. மாணவர்களாகிய நாம் அனைவரும் படித்தோங்க வேண்டிய அரிய நூல் திருக்குறள.

உலகத்தில் வேறெந்த மொழியிலும் இல்லாமல் திருக்குறள் எமது இனிய நற்சுவை பொருந்திய தமிழில் இருப்பது நாமெல்லோரும் பெருமைப்படக் கூடியது.

இப்படிப்பட்ட இனிய குறளை இயற்றிய நமது வள்ளுவரை சென்ற சனிக்கிழமை 29-ம் திகதி நினைவு கூர்ந்தோம். நமக்கு நல்வழியை வகுத்துத் தந்த வள்ளுவரை மறப்பது தன் பெற்றோரை மறந்தவனுக்குச் சமனாகும்.

நன்றி மறப்பது நன்றன்று இல்லையேல் அன்றே மறப்பது நன்று என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். நம்மைச் சிறந்தோங்க வைத்த நன்றி திருவள்ளுவரையே சாரும். இந்த நன்றியை எம் ஆயுட்காலம் பூராவும் மறவாமல் இருப்போமாக.

எழுதியவர்:- இ. முத்துரத்தின ஆனந்தன்.

## உண்மையின் உயர்வு

-மா. வரதுகராணி-

உண்மை வாய்மை எனப்படும். வாய்மை அறம் பலவற்றிலும் கூடியதே என்ற உண்மை அரிச்சந்திரனின் வரலாற்றிலிருந்து அறியக்கிடக்கிறது. அரிச்சந்திரன் விசுவாமித்திர முனிவரின் சூழ்ச்சி வலையிற் சிக்கி பல இன்னல்களை அனுபவித்தபோதிலும வாய்மையை அவன் கைவிடவில்லை. மனிதருக்கு வேண்டுவது தூய்மை. அது இருவகைப்பட்டது. அவற்றுள் ஒன்று மனத்தூய்மை; மற்றது உடல்தூய்மை. உடல் தூய்மை நீரால் அமையும். மனத்தூய்மை வாய்மையால் அமையும். இதைத் திருவள்ளுவர் கூறுகிறார்.

"புறந்தூய்மை நீரான்
அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப்படும்."

எங்களுடைய உடல் புலையனாலும் விரும்பப்படாதது. அத்துடன் நிலையற்றது. உயிரோ நிலைநிற்பது. ஆதலால் உயிருக்கு உறுதியளிக்கும் வாய்மையை இழக்க ஒருப்படக்கூடாது. வாய்மையின் சிறப்பை உணர்த்தும்பொருட்டு

## சிரிக்கவும் சிந்திக்கவும்

பாடசாலையொன்றில் சில மாணவர்கள் கதைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

"மனிதர்களுக்கு உதவி செய்வதென்றால் யோசித்துச் செய்ய வேண்டும்" என்றான் ஒருவன்.

"ஆமடாப்பா... அன்றைக்கு நான் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொண்டேன்..." என்றான் மற்றொருவன்.

"நீங்கள் சொல்வது ரொம்ப சரி. நானும் அன்றைக்கு ஒருவனுக்கு கொஞ்சக் காசு கொடுத்தேன். நாளைக்கு தாரேன் என்றான் அவ்வளவுதான். மாதம் இரண்டாகி விட்டது. ஆளையே காணம்" என்றான் ஒரு அனுபவ மாணவன்.

"ஆனால் ஒன்று உண்மை. உதவிசெய்யத்தான் வேண்டும். ஆனால் பலனை எதிர்பார்த்து உதவிசெய்யக் கூடாது" என்றான் ஒரு பரோபகார மாணவன். ஆனால் இதை சகமாணவர்கள் எல்லோரும் கண்டித்தனர்.

எல்லாவற்றையும் கவனமாகக் கவனித்துக்கொண்டிருந்தான் ஒரு மாணவன். "சீ... நீங்க சொல்வதெல்லாம் முட்டாள்தனமடா. ஆட்களுக்கு உதவியே செய்யக் கூடாதடா எல்லாவற்றையும் அறிந்துதான் நான் யாருக்குமே உதவி செய்வதில்லையடா!" என்றான் அந்தக் கஞ்சப்பயல்!

—

தமிழ்ப் புலவர்

## சிதம்பரம் ஞானப்பிரகாசர்

— ச. சிவராஜசிங்கம் —

ஈழமண்டலத்திலே உள்ள விஞ்ஞானபுரம் என்ற ஊரிலே சாலிவாடி நகரத்திலே, கார்காத்த வேளாளருள்ளே முடிதொட்ட வேளாளராகிய பாண்டி மழவர் குலத்திலே நானூறு ஆண்டுகட்கு முன்னே ஞானப்பிரகாசர் தோன்றினார். இவர் இளமைப்பருவத்தில் தானே கல்வியை நன்கு கற்றுத்தேறி அறிஞர்களுடைய கூட்டுறவுமிகுதியாகக்கொண்டு நல்வழி நடந்தார்.

இவர் தன்னாடாம் ஈழத் திருநாட்டை விட்டு தென்னாடு வந்தார். திருப்புகலூரை யடைந்து அங்கிருந்து ஆதிசைவராகிய பெரியண்ணு சுவாமிக் குருக்களிடம் தீட்சை முதலியன பெற்று தில்லையை அடைந்து சிவகங்கையிலே மூழ்கி ஈசனை வழிபட்டு சில காலம் அங்கு வாழ்ந்தார்.

பின் தில்லையில் இருந்து கௌட தேசத்தையடைந்தார். வடமொழிப் புலமை வாய்ந்த துறவி ஒருவரிடத்தில் வடமொழி பயின்றார். வடமொழி பயின்று நன்கு வடமொழியில் புலமை பெற்றார். பின் இவர் பௌட்கராகம விருத்தி, சிவஞானபோத விருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோகசாரம், சிவயோக ரத்தினம், சிவாகமாதி மான்மியசங்கிரகம் என்னும் நூலகளை வடமொழியில் இயற்றினார். உரை செய்தார்.

திருவள்ளுவர் பின்வரும் குறளைக் கூறியிருக்கிறார்:

"பொய்யாமை பொய்யாமை
ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை
நன்று".

# மத்திய கல்லூரி—சென். பட்றிக்ஸ் கிரிக்கெட் போட்டி

## சென். பட்றிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், சென். பற்றிக்ஸ் கல்லூரி 2 விக்கெட்டுகளாலும் 2 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி கோஷ்டி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. மத்திய கல்லூரி கோஷ்டியைச் சேர்ந்த பாஸ்கரன், அரசரட்ணம் ஆகியோர் துடுப்பெடுத்தாடி முறையே 25, 20 ஓட்டங்களைக் கைப்பற்றினர். சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் பந்தெறியும் வீரர்களாகிய சண்முகராஜா 37 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும், அன்ரன் 45 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகிய விளையாட்டில், துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கோஷ்டி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 147 ஓட்டங்களைக் கைப்பற்றியது. திறமையாகத் துடுப்பெடுத்தாடிய வீரர்களாகிய பாக்கியம் 52 ஓட்டங்களையும் (ஆட்டமிழக்கவில்லை), வஸ்தியாம்பிள்ளை 31 ஓட்டங்களையும், கிறவுதர் 23 ஓட்டங்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது தடவையாகத் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரிக் கோஷ்டி தேனீர் இடைவேளைக்கு முன் 7 விக்கெட் நஷ்டத்துக்கு 131 ஓட்டங்களை எடுத்து தமது ஆட்டத்தை முடித்துக் (டிக்கிளாயட்) கொண்டது. அதன் பின் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய சென். பற்றிக்ஸ் கோஷ்டி வெற்றி பெறுவதற்கு 106 ஓட்டங்கள் எடுக்க வேண்டும், அதுவும் 105 நிமிட நேரத்தில். மத்திய கல்லூரி கோஷ்டி வீரராகிய அம்பலவாணர் அடுத் தடுத்து வீசிய மூன்று ஓவரில் ஒரு ஓட்டத்தைக் கொடுத்து மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கோஷ்டி வீரர்களாகிய பாக்கியம், முத்துலிங்கம், அன்ரனிப்பிள்ளை ஆகியோர் முறையே 31, 39, 12 ஓட்டங்களை எடுத்தனர்.

# ஆயுர்வேத வைத்தியசாலை திறப்புவிழா

மாவிட்டபுரம், திங்கள்

இணுவில் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் உடுவில் கிராமசபையின் ஆதரவில் உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம், இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றைத் திறந்துவைத்தார். கடந்த வியாழக்கிழமை மாலை நடைபெற்ற இத்திறப்புவிழா வைபவத்திற்கு பண்டிதர் இ. திருநாவுக்கரசு தலைமை வகித்துப் பேசுகையில் சித்த ஆயுர்வேத வைத்தியக் கலை வளர்ச்சிக்கு மக்கள் மதிப்பும் ஆதரவுமளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். யாழ்-மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் திரு த. துரைசிங்கம் பேசுகையில் வடபகுதியில் சித்த, ஆயுர்வேத வைத்திய ஆராய்ச்சி நிலையமொன்று திறக்கப்படவேண்டுமென்றும், சித்த ஆயுர்வேத வைத்தியர்களைப் பாராட்டிக் கௌரவிக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்றும் கூறினர்.

திருவாளர்கள் சி. சிவலிங்கம், பெ. கனகசபாபதி, சண்முகநாதன் ஆகியோரும் பேசினர். ஈற்றில் திரு. சி. சண்முகலிங்கம் நன்றி கூறினர்.


# "COMMERCIAL ACADEMY"

Classes will be conducted for London and Local Examinations.

Time:- DAY & NIGHT

P. S: Rapid Course for Commercial Training

Contact: REGISTRAR,
2nd Floor,
166, Hospital Road,
Jaffna.

109


# மகாஜனக்கல்லூரி வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்குமிடையே மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி 9 விக்கெட் 6 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி, முதலாவது இன்னிங்ஸில் ஆக 80 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி, ராதாகிருஷ்ணன் ஆகிய இருவரும் திறமையாகப் பந்தெறிந்து தலா நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

மகாஜனக் கல்லூரி முதலாவது இன்னிங்ஸில் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 166 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இவ்வோட்டங்களில் ருத்திரலிங்கம், விநாயகமூர்த்தி ஆகிய இருவரும் தலா 54, 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸில் 119 ஓட்டங்களைப் பெற்றது. ஜனகன் வெளியேற்றப்படாமல் 43 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த விநாயகமூர்த்தி மீண்டும் திறமையாகப் பந்தெறிந்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மகாஜனக் கல்லூரி வெற்றி பெறுவதற்கு 33 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது. அவர்கள் ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 39 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட், 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றனர்.

# இந்துக்கல்லூரி வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குமிடையே யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கல்லூரிகளின் வருடாந்த கிரிக்கெட் போட்டியில் யூனியன் கல்லூரி 2 விக்கட் 4 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

முதலாவதாக துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி முதலாவது இன்னிங்சில் 102 ஓட்டங்களைப் பெற்றது. இவற்றுட் கே. கணேசலிங்கம் 28 ஓட்டங்களையும், எஸ். சிவராசா 27 ஓட்டங்களையும், கே. ஆனந்தராசா 21 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். யோகிலிங்கம் திறமையாக பந்தெறிந்து ஆறு விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

யாழ். இந்துக்கல்லூரி முதலாவது இன்னிங்சில் திறமையாக துடுப்பெடுத்தாடாமையால் ஆக 97 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். இவற்றுள் வி. அருளானந்தம் 26 ஓட்டங்களைப் பெற்றார். யூனியன் கல்லூரியைச் சேர்ந்த கே. ஆனந்தராஜ 4 விக்கட்டுக்களைக் கைப்பற்றினர்.

யூனியன்கல்லூரி இரண்டாவது இன்னிங்சில் 127 ஓட்டங்களைப் பெற்றது. இவ் ஓட்டங்களில் எம் சுந்தரமூர்த்தி 48 ஓட்டங்களைப் பெற்றார். யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த சிவசத்தியசீலம், சத்தியானந்தம் ஆகிய இருவரும் தலா 4 விக்கட்டுக்களைக் கைப்பற்றினர்.

யாழ். இந்துக்கல்லூரி வெற்றி பெறுவதற்கு 132 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது. அவர்கள் 8 விக்கட் நஷ்டத்திற்கு 136 ஓட்டங்களை இரண்டாவது இன்னிங்சில் பெற்று 2 விக்கட் 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர்.


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு வீடும் வளவும்

626/10, தலையாளி ஒழுங்கை, நாச்சிமார் கோவிலடி, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்திலுள்ள 6 பரப்பு நிலமும் வீடும் விற்பனைக்கு உண்டு. விரும்புபவர்கள் ச. பொன்னையா, ஆசிரியர், சங்கத்தானை, சாவகச்சேரி என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 25

அளவெட்டி தடுகப்பை (இருல்மடத்தடி) யில் 9—10 பரப்புக்காணிவிற்பனைக்குண்டு. தேவையானோர் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். மே/பா. லிங்கவாசம், அளவெட்டி. 24

## தேவை

உடனடியாக ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு அனுபவமுள்ள தச்சு வேலையாட்கள் தேவை. கதவு - பலகை வேலைகளில் தேர்ந்த அனுபவமுடையவர்களே விண்ணப்பிக்கவேண்டும். எட். ஸூப்பிளின் எ ஜி., காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன் துறை என்ற விலாசத்துக்கு நேரில் வரவும். 30

## தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பிரபலங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி. யாழ்ப்பாணம்.


# பிரதமருக்கு மகஜர்

பதுளை, திங்கள்

மக்களிடம் கையொப்பங்கள் வாங்கி விலைவாசி உயர்வை தடுக்க நடவடிக்கை எடுக்கக் கோரும் மகஜர் ஒன்றை பிரதமருக்கு அனுப்பிவைப்பதென இடதுசாரி ஐக்கிய முன்னணியின் பதுளைக்கிளை முடிவுசெய்துள்ளது.

# வானொலிநிகழ்ச்சிகள்

## செவ்வாய் 10-3-64

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 திரை இசை, 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை.

இரவு 6-10 விலைவாசிகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 சிறிலங்கா குறுக்கெழுத்துப் போட்டி, 7-00 விவேகச்சக்கரம், 7-30 இசைநிகழ்ச்சி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-15 நாகஸ்வரம் — பி. சண்முகசுந்தரம்.


# ஒஸ்டர்மில்க்

குழந்தைகள் அழகாகவும் ஆரோக்கியமாகவும் திகழ்கிறார்கள்






தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இரும்புச்சத்தும், விட்டமின் டி யும் கொண்ட சுத்தமான பால் ஆகாரம்.

குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வதைக் கண்டு ஆனந்தமடையுங்கள்

# ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபால் பெட்டி 23, கொழும்

# 'திறைசேரியின் வற்புறுத்தல் நல்ல சூழ்நிலையை பாதிக்கும்'

## கட்டாய ஓய்வுபற்றி தொழிற்சங்க பிரமுகர் கருத்து

கொழும்பு, திங்கள்

'சிங்களத்தில் தேர்ச்சி பெறாத அரசாங்க ஊழியர் கட்டாய ஓய்வு பெற வேண்டுமென திறைசேரி வற்புறுத்திக்கொண்டிருப்பதால் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் நடைபெறவிருக்கும் சர்வகட்சி மகாநாட்டினால் எழுந்துள்ள சூழ்நிலை பாதிக்கப்பட்டுவிடும்' என அரசாங்க சேவை தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுக்காரியதரிசி திரு. வில்பிரட் பெரேரா தெரிவித்துள்ளார்.

திரு. வில்பிரட் பெரேரா இதுபற்றி மேலும் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளதாவது:

மொழிப்பிரச்சினையை சமரசமாகத் தீர்த்துக்கொள்ள அரசாங்கம் உயர்ந்த ரீதியில் பேச்சுவார்த்தைகளை நடத்தவிருக்கும் இந்த வேளையில் சிங்களத்தில் தகுதிபெறாத பழைய அரசாங்க ஊழியரை (1956-ம் வருடத்துக்கு முன் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள்) கட்டாய ஓய்வுபெறுமாறு அறிவிப்பது திறைசேரியின் முன் யோசனையற்ற செயல் என்றே கூறவேண்டும்.

திறைசேரி இவ்விதம் சடுதி நடவடிக்கைகள் எடுக்காதவாறு கண்காணித்துக்கொள்ள வேண்டும் எனத் தாம் அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளதாகத் தெரிவித்து திரு. பெரேரா தொடர்ந்து கூறியுள்ளதாவது:

முன்னாள் தொழிற்சங்கத் தலைவரின் கீழ் இயங்கிவரும் திறைசேரி மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையால் எழுந்துள்ள நல்ல சூழ்நிலைக்கேற்ப விஷயங்களை மேற்கொள்ள தம்மைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

கட்டாய ஓய்வு விஷயத்தில் அதிக ஆலோசனையுடன் நடந்து மொழி மகாநாட்டின் தீர்மானம் வரை இதை ஒத்திப்போட வகை செய்யப்படுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

தமிழரசுக்கட்சி

# எல்லா ஊர்களிலும் கிளைகளை அமைக்கும்

## உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிட ஏற்பாடு

நல்லூர், செவ்வாய்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கட்சி அடிப்படையில் போட்டியிடுவதென தமிழரசுக்கட்சி முடிவுசெய்திருந்தும் அவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஸ்தலஸ்தாபன சபைகளில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கக்கூடிய வகையில் கட்சிக் கிளைகள் அமைக்கப்படாமையே இதற்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

தற்போது வடபகுதியிலுள்ள ஸ்தலஸ்தாபன சபைகளின் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுவருகின்றன. கட்சி ரீதியில் பல உள்ளூராட்சி மன்றங்களில் இடதுசாரி ஐக்கிய முன்னணி போட்டியிடுகின்றது. தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் இத்தேர்தல்களில் போட்டியிட்டாலும் கட்சிரீதியில் போட்டியிடவில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதெனக் கட்சி செய்துள்ள முடிவுக்கு ஏற்ற வகையில் இனிவரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட ஊர்கள் தோறும் கிளைகள் அமைக்கும் யோசனையைக் கட்சியின் தலைமைப்பீடம் அமுலாக்குவதென முடிவுசெய்துளளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஊர்கள்தோறும் கட்சிக்கிளைகளை அமைக்க உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. வடபகுதிக்கு வட்டுக்கோட்டை எம். பீ. திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையிலும், கிழக்குமாகாணத்திற்கு செனட்டர் திரு. எம். மாணிக்கம் தலைமையிலும் நியமிக்கப்பட்டுள்ள இந்த உப குழுக்கள் அடுத்த மாத இறுதிக்குள் தமது வேலைகளைப் பூர்த்திசெய்வதில் துரிதமாக ஈடுபட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இதர கட்சிகள் போட்டியிடும்போது தமிழரசுக்கட்சி பின்நிற்பது மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை ஏற்படுத்துவதாக இருக்குமென கட்சிப் பிரமுகர்கள் பலர் தெரிவித்தனர்.

## மாவிட்டபுரத்தில் நவீன ரயில் நிலையம்

தெல்லிப்பழை, திங்கள்

மாவிட்டபுரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய புகையிரத நிலையம் விரைவில் நிர்மாணிக்கப்பட இருப்பதாகத் தெரிகிறது. புதிய புகையிரத நிலையத்திற்கான பிளாட்பாரம் அமைக்கும் வேலைகள் பூர்த்தியாகும் நிலையிலுள்ளன. சுமார் 300 அடி நீளமான இந்தப் பிளாட்பாரம் அடுத்த மாதத்தில் பொதுமக்களின் உபயோகத்துக்கு வருமென அறியப்படுகிறது.

நவீன வசதிகளடங்கிய புகையிரத நிலைய நிர்மாண வேலைகள் விரைவில் மேற்கொள்ளவிருப்பதாகவும் புகையிரத நிலையத்திற்கான காணியை அரசாங்கம் கையேற்றுள்ளதாகவும் தெரிகின்றது.

## கோரிக்கையை கைவிட்டனர்

யாழ்ப்பாணம், திங்கள்

இறைச்சிக் கடைக்காரர்கள், ஆடுகளுக்குக் கூடுதலாக விலை தரவேண்டுமென்று ஆட்டு வியாபாரிகள் விடுத்த கோரிக்கையை இன்று கைவிட்டனர்.

இறைச்சிக்கடைக் கூட்டு முன்னணி இவர்களின் கோரிக்கையை ஆட்சேபித்து, வாழ்க்கைச்செலவு கூடிய இந்நேரத்தில், கூடிய விலைக்கு ஆடு வாங்கி கூடிய விலைக்கு இறைச்சி விற்கமுடியாதென கூறியதைத் தொடர்ந்தே, ஆட்டு வியாபாரிகள் சங்கம் கோரிக்கையை கைவிட்டதென தெரியவருகிறது.

நல்லூர், திங்கள்

சகல அரசாங்க பகுதித் தலைவர்களுக்கும் அரசாங்க சேவை உத்தியோகத்தர்களுக்கான சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை மே மாதம் 9, 16-ம் திகதிகளில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சையில் தோற்ற விரும்புபவர்கள் இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிவராத்திரி

### வண்ணார்பண்ணை

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் வருகிற 12-3-64 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மகாசிவராத்திரி விழா அனுஷ்டிக்கப்படும்.

### தெல்லிப்பழை

தெல்லிப்பழை கிழக்கு கவுணாவத்தை ஞானவைரவர் கோவிலில் வருகிற 12-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிவராத்திரி விழா கொண்டாடப்படும்.

### கிளிநொச்சி

உருத்திரபுரம் புராதன சிவாலயத்தில் மார்ச் மாதம் 12-ம் திகதி மகாசிவராத்திரியைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அன்றிரவு முழுவதும் நான்கு சாமங்களிலும், விசேஷ அபிஷேக ஆராதனைகளும், புராணபடனம், ஜனை, சமயச் சொற்பொழிவுகள் ஆகியன நடைபெற்று வெள்ளிக்கிழமை காலை மகேசுர பூசையும் நடைபெறும். இவ்வாலயத்தில் அண்மையில் ஸ்ரீ மனோன்மணி அம்பாளுக்கு புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெற்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

### கொடிகாமத்தில்

மீசாலை வடக்கு கட்டைபறிச்சான் திருநீலகண்டப் பிள்ளையார் ஆலயத்தில், மகா சிவராத்திரி விழாவை 12-ம் தேதி வியாழக்கிழமை இரவு திரு. திருப்புஷ்பசாமி ஆரம்பித்துவைப்பார்.

திரு. பேரம்பலம் செல்லையா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், திரு. ம. சத்தியமூர்த்தி, திரு. பொன். கந்தையினார், திரு. இ. அம்பலவாணர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள். இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரையால், இசை விருந்தளிக்கப்படும். சந்தக்கவிமணி, திரு. சி. சின்னையா, திரு. க. சின்னையா, திரு. ம. நடராசா ஆகியோர் புராண பாராயணம், செய்வார்கள்.

### கைதடி

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்க ஆதரவில், கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் 12-ம் திகதி இரவு சிவராத்திரி விழா நடைபெறும். திருவாளர்கள்: எஸ். கணேசசுந்தரம், எஸ். சரவணமுத்து ஆகியோர் கதாப்பிரசங்கம் செய்வார்கள். திரு. எஸ். தியாகராஜா இன்னிசைவிருந்தளிப்பார். திருவாளர்கள்: வை. நல்லையா, த. சுவாமிநாதன், க. இந்திராசா, தா. பொன்னம்பலம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## ஆஸ்பத்திரிக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### சுகாதார மந்திரி அறிவிப்பு

டாக்டர்களும், வைத்திய நிபுணர்களும் மீண்டும் வேலைக்குத் திரும்பியுள்ளதால் அவர்களை விரைவில் சந்திக்கத் தயாராகவிருக்கிறேன் என்று சுகாதார மந்திரி திரு. பதியுதீன் மஹ்மூத் தெரிவித்துள்ளார்.

"வைத்திய நிபுணர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நாங்கள் ஆவலாகவிருக்கிறோம். அவர்களின் நேர்மையான கோரிக்கைகளுக்கு நாங்கள் நிச்சயம் செவிசாய்ப்போம்" என்றும் சுகாதாரமந்திரி தெரிவித்தார்.

## மகாநாயக்காவை பலவேகயா சந்தித்தது

செங்கடகலை, திங்கள்

பௌத்த ஜாதிகபலவேகயாவின் தூதுகோஷ்டி ஒன்று அண்மையில் மல்வத்தை பீடாதிபதியை சந்தித்தது. தூதுகோஷ்டிக்கு பலவேகயாவின் தலைவர் திரு. எல் எச். மேத்தானந்தா தலைமை வகித்தார்.

# முஸ்லிம் ஆசிரியர் இடமாற்றம்:

## கல்வி மந்திரிக்கு அரசினர் முஸ்லிம் ஆசிரிய சங்கம் ஆட்சேபம்

கொழும்பு, திங்கள்

கொழும்பிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஏராளமான ஆசிரியர்களை கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் செய்தது குறித்து அகில இலங்கை அரசினர் இஸ்லாமிய ஆசிரிய சங்கம் கல்வி மந்திரிக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் மத அடிப்படையில் இடமாற்றம் செய்யப்பட வேண்டுமென்று கல்விக் கமிஷன் சிபார்சு செய்துள்ளதென்றும் கொழும்பிலுள்ள முஸ்லிம் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதால் கொழும்பிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஆசிரியர் பற்றாக்குறை மேலும் மோசமாகுமென்றும் மந்திரிக்கு சங்கம் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் ஆசிரியர்களின் இந்த இடமாற்றத் திட்டம் அமுல் செய்யப்பட்டால், தற்பொழுது கொழும்பில் உயர் கல்வி பெறும் பல முஸ்லிம் ஆசிரியர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள் என்றும் மந்திரிக்கு சங்கம் தெரிவித்துள்ளது.

## "டாக்டர்களுக்கே அதிக சம்பளம்"

கொழும்பு, திங்கள்

அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களில் டாக்டர்களே கூடிய சம்பளம் பெறுகிறார்கள் என்று பிரதம மந்திரிக்கு இலங்கை நிர்வாகசேவைப் பகுதியினர் வைத்திய நிபுணர்களின் கோரிக்கையையிட்டு அனுப்பிய மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

அந்த மகஜரில் நிர்வாகப் பகுதி உத்தியோகத்தருக்கும், தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் ஆரம்ப சம்பளம் 340 ரூபாவாக இருக்கும்போது டாக்டர்களுக்குமட்டும் ஆரம்ப சம்பளமாக 490 ரூபா கொடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 25 பேர் பலி

லண்டன், மார்ச் 9

கொலம்பியாவில் ஏற்பட்ட ஒரு விமான விபத்தில் 25 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## ஒத்திவைப்பு

கொழும்பு, திங்கள்

இம்மாதம் 14-ம் திகதி இடம்பெறவிருந்த தொழிற்சங்கங்களின் இணைப்புக் கவுன்சில் மகாநாடு 21-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

## காணவில்லை

### தகுந்த வெகுமதி

எனது வீட்டிலிருந்த கறுப்பையா வேலு என்றழைக்கப்படும் 12 வயதுள்ள சிறுவனை நேற்று (திங்கட்கிழமை) முதல் காணவில்லை. நிறம் கருமை. உயரம் சுமார் 4 அடி 2 அங்குலம். நல்ல தேகக்கட்டு சாரமும் ஷேர்ட்டும் அணிந்திருந்தார். இவரைப் பற்றிய தகவல் அறிவிப்பவருக்கு அல்லது நேரில் இச்சிறுவனை எம்மிடம் கொடுப்பவருக்கு தகுந்த வெகுமதி வழங்கப்படும்.

பொ. நடுநாயகம், இளைப்பாறிய பொதுசன சுகாதார பரிசோதகர், பிள்ளையார் கோவிலடி, கொல்லங்கலட்டி.

வெற்றிகரமான 2-வதுவாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 3 திரைகளில்

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறார்கள்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது